657

பிஸ்மில்லாகி:

பலநோய்களும் நீங்கும்

# பாதுகாப்பு மஜ்மூஉமாலை.

இதனுள்
முஹம்மதிய்யா மாலையும்,
பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலையும்,
ஷிபாவுல் வபா முனாஜாத்து மாலையும்,
தபவுல் வபா கார்மான முனாஜாத்தும்
சேர்ந்திருக்கின்றன.

இதை,
கோட்டாறு.
மகுதூம்பாவா காஸீம் தரகனாரவர்கள் புதல்வர்
வா. மு. மூஹம்மது யூசுபுலெப்பை
அவர்களால் பார்வையிட்டு.

---

மதராஸ் மூர்த்தெருவு எஸ்-முஹம்மது இசுமாயீல்
ஸாஹிபு அவர்களாலும்
மதராஸ் திருவல்லிக்கேணி, உ.க. செய்யிது
முஹியித்தீன் லெப்பை அவர்களாலும்
மதராஸ் திருவல்லிக்கேணி, கானா. ஹஸன்முஹம்மது
அப்துல்காதிறுஸாஹிபு அவர்களாலும்
மேலப்பாளையம், ஆலப்பிள்ளைத் தெருவு, கச்செ. முஹம்மது
அப்துல்காதிறு ஸாஹிபு அவர்களாலும்
நன்முயற்சிப்பொருளுதவியைக் கொண்டு

சென்னை சூளை:
"ஸன் ஆப் இந்தியா" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1922.

[ரிஜிஸ்டர் காப்பிரைட்.

Q7:447
N22
184393

# பெரிய மரண விளக்கம்

## மனதைத் துலக்கும்

உலகத்தில் வாழ்வு தாழ்வைபற்றி நல்லுணர்ச்சிவருத்துகிற விபரம். உலகத்தில் நடக்கும்நற்சியல், துற்செயலை விலக்குவதின்விபரம். சிலர்கள் செத்துப்போவோமென்று நோய்களுக்கு பயந்து ஒழித்து மறைந்து திரிகிற விபரம்.

வபாகால் ரூஜ ஊதுரிமுதலிய சிலவியாதிகள் ஊரில் வந்துவிட்டால் பக்கத்திலுள்ள சில ஊர்களில் போயிருந்துக்கொள்கிறதும், நாம் சாகமாட்டோமென்று நினைத்திருக்கிறதையும் விபரிக்குதல்.

நபிமார்கள் சக்ருத்துஹாலைபற்றி விஸனித்து அழுகிறவிபரங்கள் ஷை நபிமார்கள் நாள்தோறும் நினைத்துநினைத்து அழுது புலம்பிக்கொண்டே திரிகிற விபரங்கள், ஒலிமார்கள் சக்ருத்தைநினைத்து அழுகிறதையும் மனதுநோவித்து புலம்புகிறதையும் விபரிக்குறது. சக்ருத்து சமயத்தில் நல்லவன் பொல்லாதவன் இருவர்களும் படுகிறநுட்பங்களை, மவுத்தில் ஒருமலக்குச்சொல்வது அதின்விபரங்கள், மவுத்துஹாலில் இபுலீஸ்வந்து ஏமாத்துகிறது. றூஹூபோனபின் ஜனங்கள் அழுகிறதை மையத்துகேட்டு ஜனங்களுக்கு தேறுதல்சொல்லி புலம்புகிறவிபரங்கள் மையத்து தன்மக்களுக்குசொல்லும் விபரங்கள். மையத்து தன்பந்துக்களுக்கு சொல்லும்விபரங்கள். குளிப் போட்டும்போது மையத்துச்சொல்வது, கபனிடும்போது மையத்துச்சொல்வது, கபனை கட்டியபின் ஓர்மலக்கு சொல்வதின் விபரங்கள், வெளிப்புறப்படும்போது மையத்துச்சொல்வது, மையத்து தெருவிலானபின் ஓர்மலக்குச்சொல்வது, தொழுகை வைகாயில் மையத்திற்கு ஓர்மலக்குச் சொல்வது, அடக்கயில் மையத்து ஸலாம் சொல்கிற மையத்து மண்ணில் மறைந்தபின் கபறு மண்ணால் நிறையமுன் மையத்தில் றூஹூநுளைவதும் றூமான் மலக்குவந்து கேட்பதின்விபரங்கள். முன்கறநகீற் மலக்குவந்து கேட்கும்விபரங்கள், மையத்து தான்செய்திருந்த அமல்க்களை சொல்வதின் விபரங்கள், மஹ்ஷறுகளில் படுகிறவேதனை அதாபுகளின் விபரங்கள். பிற்பாடு மற்ற நபிமார்களிடம் போகிறதும் நபிமார்கள் றசூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமிடம் போகச்சொல்கிறதும், றசூல்லாவைக்கண்டு ஷபாஅத்தை பெற்றுக்கொள்ளும் விபரங்களும் இன்னும் ஆகிறத்தில் நமக்கு கெடைக்குகிற நன்மை தின்மைகளைப்பற்றியும் இந்த புஸ்தகத்தில் விபரமாக யாவர்களுக்கும் இலகுவில் விளங்கும்படி விபரித்திருக்கின்றன. நல்லசுத்தப்பதிப்பாக திரித்தி அச்சிட்டிருக்கிறது. பெரிய மரணவிளக்கம் மனதைத்துலக்கும். இந்தபேர் நாமத்தை பார்த்து வாங்கவும்.

இதின் விலை அணா 0 5 0

இந்த புஸ்தகமும் இன்னும் அநேகவித புஸ்தகமும், கிதாபுகளும், வாசனை திரவியங்களும், ரப்பர்ஸ்டாம்புமுதலியவைகளும், மருந்து சாமான் லேகியங்களும், உயர்ந்த ஹீக்கோ சென்டுகளும் அத்தர்முதலிய திணுசுகளும் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

---

விலாசம்—யூசுபிய்யா கம்பெனி,

பெருமாள்குளந் தெருவு, கோட்டாறு.

பிஸ்மில்லாகி:

பலநோய்களும் நீங்கும்

13 MAY 1922

# பாதுகாப்பு மஜ்மூஉ மாலை.

இதனுள்

**முஹம்மதிய்யா மாலையும்,**

**பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலையும்,**

**ஷீபாவுல் வபா முனாஜாத்து மாலையும்,**

**தபவுல் வபா கார்மான முனாஜாத்தும்**

**சேர்ந்திருக்கின்றன.**

இவை.

கோட்டாறு. மஷாயிகுமார்களி லொருவராகிய

ஷெய்கு யூசுபு ஸாஹிபுல் காதிரி அவர்களின் குமாரர்

**ஷெய்கு முஹம்மது ஆலிம் ஸாஹிபு**

அவர்களாலும்,

காயற்பட்டணம். ஹாஜி ஷெய்கு அப்துல் காதிறு லெப்பை

ஆலிம் சாஹிபு அவர்களின் குமாரர்

**ஹாஜி முஹம்மது அபதுல்லா லெப்பை**

ஆலிம்சாஹிபு அவர்களாலும் இயற்றப்பட்டவை.

இதை,

**கோட்டாறு.**

மகுதும்பாவா காஸீம் தரகனரவர்கள் புதல்வர்

**வா. மு. முஹம்மது யூசுபுலெப்பை**

அவர்களால் பார்வையிட்டு.

ஷை யூர்,

**முஹம்மதிய்யா கௌன்ஸில் ஸபையோ**

ரவர்களின் நன்முயற்சியினல்,

---

சென்னை சூளை :

"ஸன் ஆப் இந்தியா" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

விலை அணா—4 ] [ரிஜிஸ்டர் காப்பிரைட்.

# முக்கிய கவனிப்பு.

சகல கனவான்களான சகோதரர்களே !

[illegible] நீங்கும் பாதுகாப்பு மஜ்மூஉமாலை, இந்த பாதுகாப்பு மஜ்மூஉ[illegible]டங்கிய பாடல்களை வியாதியஸ்தர்கள் நோயாளிகள், வெள்ளி திங்கள் இரவுகளில் பக்தியாக மனஞாபகத்தோடு மனதுருக்கத்துடனிருந்து ஓதிவந்தால் அவ்வியாதிகளெல்லாம் நீங்கி நற்சுகத்தைக்காண்பார்கள்.

ஜூதரி யென்னும் வைசூரி ரீஹூல் லஹ்மறென்னும் பிளேக்கு வாந்திபேதி, கால்ரா, காச்சல் முதலிய பலவியாதியுடையவர்களுக் கருகேயிருந்து காது கேட்கும்படி ஓதிவந்தால் அவர்கள் கலாஸ் பெறுவார்கள்.

கன்மப்பிணி, காரணப்பிணி யுடையவர்களோதினலும் வேறு எந்த நோயாளிகளோதினலும் அல்லது வியாதியஸ்தர்களுக் கருகே யிருந்து வேறொருவர் ஓதினலும் எல்லா நன்மைக்குரிய ஆண்டவன் கிருபையினலும் இந்நூலி லமைந்த பேர் நாமங்களுடைய அன்பியாக்கள், ஒளலியாக்கள், நாதாக்கள், ஷூஹதாக்கள், ஸாலிஹீங்கள் முதலிய மகான்கள் அனுபறக்கத்தாலும் கிருபாகடாக்ஷத்தாலும் சகல வியாதிகளுந்தீர்ந்து நற்சுகத்தைக் காண்பார்கள்.

ஜூதரிவபா கால்ரு பிடித்திருக்கும் வீடுகளிலும் அல்லது, ஜூதரி வபா கால்ராவந்த காலங்களிலும் இதிலடங்கிய பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, ஷிபாவுல் வபா முனஜாத்து மாலை, இவ்விரண்டையும் அவ்வூரில் தெருவீதிகள் தோறும் அந்தி சந்தி மக்ரிபு நேரத்தில் ஓதிவந்தால் எவ்விதமான (ஜூதரி) என்னும் வைசூரி (ரீஹூல்லஹ்மற்) என்னும் பிளேக்கு, (வபா) என்னும் கால்ரு வாந்திபேதி காச்சல் முதலிய பல வியாதிகளும் அவ்வூரைவிட்டு நீங்கிவிடும்.

முன்னோர்களியற்றிய நூல்களில் கூறிய நாலாயிரத்தி நானூற்றிநாற்பத்தெட்டு வியாதிகளுக்கும் இதுவே அற்புத அவுஷதமாயிருக்கும் இப்பாடலிருக்கு மிடத்தில் யாதொரு துன்பமு மணுகாது இப்பாடல் ஒவ்வொரு வீடுகளிலும் இருந்து வரவேண்டிய தவசியம்.

மனக்கவலை, சஞ்சலம், வியாகூலமுடையவர்கள் இப்பாடலைபடித்துவந்தால் மனக்கவலை, வியாகூலம், மனப்பீடை, சஞ்சலம் எவ்வித துக்கசாகரமான கவலைகள் குடிகொண்டிருந்தபோதிலும் அவைகள் நீங்கி மனதுக்கு ஒருவித சந்தோஷஸல்லாப உல்லாசங்களான இன்பங்களைத்தரும்.

தங்கள் தங்கள் நினைத்தகாரியங்கள் கைகூடுவதற்கு நாடினவர்கள் அந்திசந்தி பக்தி ஞாபகத்தோடுமனதுருக்கத்துடனிருந்துநேமமாக ஊதுவத்தி வாசனைகள் வைத்து இந்நூலை ஓதிவந்தால் நினைத்தகாரியங்கள் கைகூடும்.

குழந்தைகள் அழுது சில்லரை சச்சரவு சிறமப்படுத்தினல் இதிலடங்கிய, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலையை ஓதித்தாலாட்டினல் தடையன்றி அக்குழந்தைகள் அழாமல் சுகமாகக்கிடந்து நித்திரைசெய்து முழிக்கும் இதனை பன்முறையும் தென்தேசங்களில் பரிசோதித்திருப்பதினல் தங்கள் தங்களும் பரிசோதித்துப் பார்க்கவும்.

பிஸ்மில்லாகி.

ஷெ ஹாஜி முஹம்மதப்துல்லாலெப்பை ஆலிம் சாஹிபு

அவர்களியற்றிய

# முஹம்மதிய்யா மாலே.

காப்பு விருத்தம்.

மங்களம் பெருகுமக்க மதீனத்தில் தீனேக்காத்த
மங்களம் பெருகுநல்ல முஹம்மதாம் மகிபன்மீது
மங்கள முஹம்மதிய்யா மாலேயை வகுப்பதற்கு
மங்கள சொரூபன் றன்சீர் மலரடி வணங்குவாமே.

அல்லா உம்ம ஸல்லி அலாமுஹம்மது
யாறப்பி ஸல்லி அலேகி வஸல்லம்

G9:110 N32

## பைத்து.

ஸல்லல் இலாகு அலாமுஹம்மது
வல்லாலி வஸ்ஸஹ்பீ வஸல்லம். (அல்லா)

ஆதியில் முத்தொழி வாமுஹம்மது
அஹ்லா அபுல் அறுவாஹ் வஸல்லம் (அல்)

பதுறுபோல் முகமுடையோர் முஹம்மது
பாஷாறசூல் நபியாம் வஸல்லம் (அல்)

தாஜுறுவில் லன்பியா முஹம்மது
தங்கம்போல் பதனுடையோர் வஸல்லம் (அல்)

தானியா தரித்தவர்கள் முஹம்மது
தானவன் சமுகத்திலே வஸல்லம் (அல்)

ஜலாலும் ஜமாலுமானோர் முஹம்மது
ஜல்ல ஜலாலுகு ஜாகு வஸல்லம் (அல்)

ஹக்கீமுன் ஹலீமுன் ஹபீபுன் முஹம்மது
ஹாமீதும் ஹம்தும் ஹமீது வஸல்லம் (அல்)

கைறுல் கலாயிகானோர் முஹம்மது
காத்திமுல் லன்பியாவாம் வஸல்லம் (அல்)

தய்யாள ரானவர்கள் முஹம்மது
தறுமம் மிகுந்தவர்கள் வஸல்லம் (அல்)

தாத்தொழிலை கண்டவர்கள் முஹம்மது
தாத்தும் ஷிபாத்துமானோர் வஸல்லம் (அல்)

றஹ்மத்தன் லில்ஆலமீன் முஹம்மது
ரூஹிமாய் வந்தவராம் வஸல்லம் (அல்)

ஸக்கிய்யத் தானவர்கள் முஹம்மது
ஸைனாக வந்துதித்தோர் வஸல்லம் (அல்)

ஸிர்றான அகமியமாம் முஹம்மது
ஸிர்றில் லுஜூதத்தவராம் வஸல்லம் (அல்)

ஷிரஸின்மேல் தாழ்தரித்தோர் முஹம்மது
ஷிறுக்குடையோர் பணிந்தார் வஸல்லம் (அல்)

ஸாபின் ஸபிய்யுன் ஸலாமுஹம்மது
ஸாதிக்குல் வஹ்தில் லமீன் வஸல்லம் (அல்)

லாஹில் முஹப்யா அலா முஹம்மது
லாஅல் லுஜூது பிகி வஸல்லம் (அல்)

தாஊஸாயிருந்த மயில் முஹம்மது
தூபாலி உம்மத்திகி வஸல்லம் (அல்)

லாபிறன் நிஹ்மல்லபீர் முஹம்மது
லாஹிறும் பாத்தினுமாம் வஸல்லம் (அல்)

ஐனில்லா அறபியுமா முஹம்மது
ஐனாக வந்தவராம் வஸல்லம் (அல்)

கைபான மறைபொருளாம் முஹம்மது
கௌதுல் அனுமானவராம் வஸல்லம் (அல்)

பாதல் படியிற்றோயா முஹம்மது
பைகாம்பறானவராம் வஸல்லம் (அல்)

குறைஷிக் குலக்கொழுந்தா முஹம்மது
குர்றத்துல் ஐனனியாம் வஸல்லம் (அல்)

கஸ்தூரி மேனியராம் முஹம்மது
கர்ப்பகத் தருவானோர் வஸல்லம் (அல்)

லிவாவுல் ஹம்துடையோர் முஹம்மது
லௌலாக்க லாஅப்லாக் வஸல்லம் (அல்)

மீமில்லா அஹ்மதுவாம் முஹம்மது
மீமாக வந்துதித்தோர் வஸல்லம் (அல்)

நூறுஹூபகித மன்பரு முஹம்மது
நாபிஅன் கிஹ்மல்வரு வஸல்லம் (அல்)

வானத்தின் மேலேஅலா முஹம்மது
வஸனித்து வந்தவர்கள் வஸல்லம் (அல்)

ஆஷீம் றசூல்நபியாம் முஹம்மது
ஆதியாய் வந்துதித்தோர் வஸல்லம் (அல்)

லாமிதுல உகமெயிலே முஹம்மது
லா லில்லென்னும் ஷாய்கையாம் வஸல்லம் (அல்)

ஏகந்திரு விழக்காம் முஹம்மது
எங்கும் மணிவிழக்காம் வஸல்லம் (அல்)

எனுக்குந்தாய் தந்தையர்க்கும் முஹம்மது
ஈடேத்தஞ்செய் தருள்வீர் வஸல்லம் (அல்)

எனத்தார் சனத்தவர்க்கும் முஹம்மது
எவுமல் கியாமத்திலே வஸல்லம் (அல்)

மக்கள் மனவியர்க்கும் முஹம்மது
மண்டாடும் மஹ்ஷறிலே வஸல்லம் (அல்)

அற்ஹாம் அஹ்பாபுக்கும் முஹம்மது
அப்துல்லா ஸாஹிபுக்கும் வஸல்லம் (அல்)

வஸ்ஸலாமு அலாமுஹம்மது
வல்லாலி வஸ்ஸஹ்பீ வஸல்லம் (அல்)

முற்றிற்று.

# பக்தி ஆனந்த பாத்திமுத்துமாலை.

காப்பு விருத்தம்.

அல்லலை யொழிக்க வந்நா ளாண்டவ னனுப்பவந்த
வல்லரா முஹம்மதீன்ற வஞ்சி பாத்திமா தன்மேல்
நல்ல பாத்தி மாமுத்து மாலையை நவில்வதற்கு
சொல்லருங் கடவுள் பாதந் துணைசிரஞ் சூடுவாமே.

லாயிலாக இல்லல்லாகு லாயிலாக இல்லல்லா
லாயிலாக இல்லல்லாகு முஹம்மதூர் றசூலுல்லா

## பைத்து.

முபஸ்மிலன் முஹம்திலன் முஸல்லியன் முஸல்லியா
அலன்னபீவல் ஆலிவல்லஸ் ஹாபிஸித்தி பாத்திமா (லா)

மறுஹபன் வமறுஹபன் அஹ்லன்வஸஹ்லன் தாயிமா
லில்முஸ்தபா வல்முறுதலா வபுனுகுமா வல்பாத்திமா. (லா)

ஆதியான நாயனுக் கடங்கலான புகழுமாம்
நீதியான நபிதமக்கு நித்தமும் ஸலாத்துமாம் (லா)

பறக்கத்தான நாயகி பதூலெஸஹ்றா ஸித்தினு
ஹறக்கத்தான ஸல்லத்தை யகற்றிவைப்பீர் பாத்திமா (லா)

தங்கமான தௌலத்லே தயாளமான றஹ்மத்தே
பங்கமான பாவத்தை பறக்கவைப்பீர் பாத்திமா (லா)

தனுவுக்குரிய தாயகி தவாபுக்குரிய நாயகி
தானியில்லான் தான்புகழும் தாஹமகளாம் பாத்திமா (லா)

ஜாகுபெற்ற அலியுல்லாவின் ஸாதியான செல்வியாம்
ஷாகுஆலம் ஷாபிஹிய்யின் ஸந்ததியாம் பாத்திமா (லா)

ஹஸன்ஹுஸைன் வமுஹ்ஸினை அழகாகபெற்ற மாதாவே
கஸ்தியான கருமம்நீக்கி காத்தருளும் பாத்திமா (லா)

காலிக்குகந்த கண்மணி கைருன நபியின் கபிதத்தே
மாலிக்கான மன்னரே மஹறுஜிபெற்ற பாத்திமா (லா)

தறுமம்மிகுந்த தர்பரமே தயவுசெய்யுந் தருணத்தில்
வறுமம் பண்ணும் வம்பரை வதைசெய்வீர்கள் பாத்திமா (லா)

தாக்கின்னெழிவில் லுதித்தவொழிவால் தரித்தவொழிவே நாயகி
காத்திம்நபியின் பிலுஹத்தே கைறுன்னிஸாவே பாத்திமா (லா)

றஹ்மத்தான றஹ்மில்னின்றும் ரெட்சிப்போ ரனந்தம்பேர்
தகுமத்தான குதுபுமார்கள் தரித்தவித்தி பாத்திமா (லா)

ஸஹ்றுபீவி வீனத்தால் ஸயானமற்ற நாயகி
துஹ்றத்தாக துதிக்கும்நாயன் துய்யவித்தி பாத்திமா (லா)

ஸுவர்க்கந்தன்னில் ஸுறத்தாய் துலங்கிகின்ற நாச்சியார்
எவர்க்கும்பாவா வானஆதம் ஏகிகண்ட பாத்திமா (லா)

விரவில்தாஜும் கழுத்தில்சவடி விரப்பாய்ரண்டு காதிலும்
விறக்கத்துலிக்கப் போட்டுத்துலங்க விறந்தவித்தி பாத்திமா ()

ஸந்தல்மணமாம் அந்தத்தாஜ ஸாஹிபுல் பலீலத்தி
அந்தஸ றைத் தில்லமைந்த ஐவராகும் பாத்திமா (லா)

லல்லத்தான சொல்லை நீக்கி ஷறஹின்வழியில் கைநைநல்கி
இல்லத்தான மருளைப்போக் கீடேற்றஞ்செய்யும் பாத்திமா ()

தையிபான அப்துல்லாதன் கூடப்பிறந்த காஸீமாம்
ஸைனபும்முக் குலுதுமாம் வஸைனுறுகய்யா பாத்திமா (லா)

ஸில்ஸில் ஸிவாஸில்சேத்தருளும் ஸித்தமான ஹலரத்தில்
அல்லலகற்றி யாண்டருளும் ஆதிஸித்தி பாத்திமா (லா)

அறுஷிடத்தில் அஸிதமக்கு அமரர்கூடும் மஜ்லீஸில்
கருதிபெறவே மங்களக் கலியாணஞ்செய்த பாத்திமா (லா)

கையில்குறித்த மஹர்தமக்கு கோமானினைத்த ஷபாஹத்து
ஐபானபெண்கள் பாவங்களை யழிக்கும்ஸித்தி பாத்திமா (லா)

பாத்திமாவின் மகள்மகவே பாத்திமாவில் மகந்தனக்கு
காத்திமான நபிமுடித்த கண்குளிர்ந்த பாத்திமா (லா)

குர்றத்துல் ஐனெனியாம் குறைஷிக்குலத்தின் தீபமாம்
தர்முன்வதமறத் துல்கதீஜா தங்கமகளாம் பாத்திமா (லா)

கறமலிய்யுல் லாதமக்கு காதலி யிருக்கயில்
ஹறுமதாகும் மறுபெண்முடிக்க அறியும்ஸித்தி பாத்திமா (லா)

லய்ஸலீ ஷய்வுன்ஸிவாக்கி லாயிகான ஹலரத்தில்
கையைப்பிடித்து காத்திரிய்யில் காட்சிகாட்டும் பாத்திமா (லா)

மலக்கு ஜப்றஹீலைக்கண்டு மனத்தால் சொன்னசொல்லுக்கு
கலக்கமகற்றி ஸித்தீகறிந்து காட்சிபெற்ற பாத்திமா (லா)

நாச்சியாரின் மதஹைறவோது நாட்டந்தீரும் நாள்தோறும்
ஹாஷிமாம் மண்டாட்டஞ்செய்யும் அரஸிஸித்தி பாத்திமா (லா)

வரிஷையான ஆயிஷாவும் வஸயால்வார்த்தை சொன்னதால்
பிரிஸமாக நபியைமேலாய் பேசும்ஸித்தி பாத்திமா (லா)

ஹாதியான வழியிலருளும் ஹாவுவாவு ரண்டையும்,
காத்திமான அப்துல்லாவை கார்க்கும்ஸித்தி பாத்திமா (லா)

லாமலாத லீஸிவாக்கி லாஸிமாஸி வாவினில்
ஆமதாக்கி ஹலரத்துல் பகாவில்லாக்கும் பாத்திமா (லா)

ஏழைமனுக்கள் கேட்கும் துஆவை ஏற்றுக்கொள்யாபாத்திமா
நாளைமஹ்ஷற் வேளையில் நஜாத்தைத்தருவீர் பாத்திமா (லா)

வஸ்ஸலாமு மின்ஸலாமின் மஃறஸலாத்தின் தாயிமா
அலாஅபீக்கி வஅலைக்கி ஆலிஹித்தி பாத்திமா (லா)

காலஹாதா யிபுனுமன் கலீபத் ஷெய்கு பூக்கோயா
குதுபுஸ்ஸமானி பஹுலுல்லா ஹிப்திஹித்தி பாத்திமா

முற்றிற்று.

# ஷிபாவுல் வபா முஃஜிஜாத்துமாலை.

காப்பு வெண்பா.

பொன்னு மணியும் பொலிந்தோங்கு மிப்புவியில்
நன்னயஞ்சே ருந்தமிழில் நல்லார்முன்—வின்னமற
சொல்லும் ஷிபாவுல் வபாமாலைத் தோற்றவருள்
எல்லாமும் வல்லபொ ருளே.

லாயிலாக இல்லல்லாகு லாயிலாக இல்லல்லா
லாயிலாக இல்லல்லாகு முஹம்மதர் றசூலுல்லா

## பைத்து.

ஆதியே நபிமீதிலும்மவர் ஆலின்மீதும் ஸலாத்தினை
ஓதுவா யுகப்பாகவே தும்ம ஸல்லிமன்ன இலாஹனா (லா)

முன்ஹிமான முன்ஜியே லக முன்பின்னுள்ள தனைவல்லாம்
மின்ஹிபாத்திக்க அஜ்மஈன் வஸல்லிமன்ன இலாஹனா (லா)

பேதியும்பல வியாதியும்விட்டு பேணவே நஸ்தஹீதுக்கா
நீதியாய்நிதம் நிண்டநீதா ஸல்லிமன்ன இலாஹனா (லா)

அம்மவாஹியில் மதியமைத்திட்ட அஹ்மதுன்னபி அன்னலால்
இம்மக்கானில் வபாவை இதுபஹ் ஸல்லிமன்ன இலாஹனா (லா)

அபூஜாகில் சொல்லுக்காக கல்லில்மரத்தை முழைப்பித்தோர்
ஸபுறுகொண்ட ஷாஹேஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனா (லா)

ஜகுதாஸர்தார் பாஷாஹே ஜினனுக்கே ஸபிய்யுல்லா
துய்யஊன்கெ ஹாறமத்கெ வாஸ்த்தே ஸல்லிமன்ன இலாஹனா ()

சுவர்க்கநீரை யருந்திடும் அஹ்றுசோபன மபூபக்கர்
ஸபர்க்கனத்தர் ஸித்தீக்கு ஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனா ()

சொல்லுமொழிக்கு நேராகவேதம் சுறுஹத்தாய்வரும் ருஜராம்
நல்லநீதராம் உமறின் ஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

வானவர்னனி நின்றஆபிது வள்ளலா முதுமானினல்
ஈனமான வபாவெயிதுபஹ் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

துல்துலாம் பரியேறிகாபிர்கள் சுத்தவீரரை கொன்றிடும்
தில்கவீ அலிசிங்கம் ஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பெண்கள்நாயகி பாத்திமாபீவி பேருபெற்ற நபீமகள்
தங்கம்போன்ற பதூலின் ஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

நம்பிராட்டி கதிஜாஆயிஷா நாச்சியார் ஹப்ஸா ஸெய்னபால்
தமப்பமுள்ள ஸபிய்யாஸௌதால் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

உண்மையாளராம் மைமுனஹிந்து உகந்தஹபீபா ஜுவைறினல்
திண்மையான வபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

தாபதாபவின் பிள்ளையாம் தய்யிப் வதாஹிர்காஸிம் வஇபுருஹீம்
தீபின்ப்றக்கத்தைக்கொண்டு எங்களை ஸல்லிமன்ன இலாஹனு ()

ஆதித்தூதரின் னம்மத்தாகிய அழகுமேவும் அப்பாஸுடன்
நீதியான ஹம்ஸாவின் ஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

ஆறுயார்கள் ஸஹீத்ஹஸ்து வஆமிறதல்ஹா ஸுபைறுனல்
பாரினில்ஷெய்கிப்னு அவ்பால் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

நல்ஹதிய்யா நபியுல்பாரி நயினாரனுப்பிய நாதராம்
குல்உவைஸுல் கற்னிய்யின் ஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனு ()

பாக்கியாகிய தோளர்தாபிவூன் பறக்கத்தாலெங்கள் பாத்திபா
பாகியாவபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

போர்களம் பறந்தோடிவெட்டிடும் பொறுதிஜஹ்பர் தய்யாறினல்
மூர்க்கமான வபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

இரவில்லாயிரம் றகஅத்தைதொழுமின்பராம் ஸெய்னுல்லாபிதீன்
குறைவில்லாபாகிற் ஜஹ்பற் ஸாத்திகால் ஸல்லிமன்ன இலாஹனு()

புலியுமானுமோர் துறையில்நின்று புனலருந்திடும் புண்யராம்
மெலிவில்லா உமறுதானி ஜஹானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

ஷாபிஹிய்யு இமாமுன தும்ம சார்ந்தஹனபி வமாலிக்கு
காபியே தும்மஹன்பலி பிஹிம் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

தங்கமாக தாருபையாக்கிய தங்களிப்ருஹீமத்ஹமின்
ஷங்கயால் ஸத்தித்தில்வபா ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பாதகற்றும் ருஜராகிய பன்பரான புலேலினல்
தீதற்றித் திருத்தமாக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

கஷ்டமான வியாதிகட்கவர் கபுறின்மண் மருந்தாயினோர்
இஷ்டமாம் மகுறாபின் ஜஹூறாலுல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பாதிரீகள் பத்துஅல்பை தின்வழிப்பாட்டிலாக்கிய பாயெவீத்
வேதியர்க்கரஸாஹோர் ஜஹூறாலுல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

வாலிபர்க்குயிர் சொர்க்கமீதிலோர் மாழிகைக்கிப்பிணை கிண்டவர்
மாலிக்கிபுளி தீனரின் ஜஹூறாலுல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

கனகாரணங்கள் காட்டிடுமொலி காஷிபானைக் குணைதினல்
குணபேதிகளான வபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

செத்தமையத்திற்குயிர் கொடுத்திடும் வலீலான ஹுல்லாஜினல்
சுத்தமாக வபானவப்போக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

ஔலியாக்கள் புயத்தின்மேலவ ரருமைகால்தரிப்பானவர்
அவரான பிமுஹியித்தீன்வலி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

மெலிந்ததீனே பெலத்ததாகவே மேல்மையாக்கித் திரித்திஹோர்
மலரந்த ருஜர் பிமுஹியித்தீன்வலி ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பெண்களில் லொலியானருபிஹா பஸரிய்யமற்றும் ஔலியா
பெண்களானவர் பரக்கத்தைக்கொண்டு ஸல்லிமன்ன இலாஹனு ()

பத்துமோராறு அல்புபேர்கட்கு பசியுந் தாகமும் பகலிரா
முற்றுந்தீர்த்த அஹ்மத்கபிருல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

மிஸ்றினில்வைத்து இஸ்ஸ்லாத்தினுக்கு மின்னும்கஷ் பாவைகாட்டி
அஷ்றபாமலி ஷாதலிய்யால் ஸல்லிமன்ன இலாஹனு [னோர்

மௌத்தின்பின் தங்களை மனமகிழக் குளிப் பாட்டினோர்
கௌதுனல் பதவிய்யின் ஜஹூறாலுல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

வல்லவன் நபி பிள்ளையேயென வாழ்தும் மக்தூம் ஜஹூறாலுயால்
வள்ளலான புகாரி ஜஹூறாலுல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

உலகமெங்கும்முவ்வரின் ஹில்மு ஒழிவுகள் பிறகாஸமாம்
கலகம் நீக்கும் நவாதீ ஜஹூறாலுல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

கல்விநட்கடலான காரண காமிலாம் ருபி ஹிய்யினல்
குல்லதன்பும் வகுத்தமிக்பிற் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

எங்கும் பிறஷங்கமாகிய எந்த லாமிபுனு மாலிக்கால்
தங்கிடாமல் வீபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

அப்துல்லா ஹலற் மீருனெலி ஐத்துறாஸிய்யின் ஜாஹினல்
அப்துக்கள்பிழை இக்பிறன்ன வஸல்லிமன்ன இலாஹனு (லா)

பாலினல்மழை பெய்யவேசெய்தபாத்திஹாம் ஐத்துறாஸிய்யினல்
பாரிஜல்கற்பி பேதியைவிட்டு ஸல்லிமன்ன இலாஹனு (லா)

கிணத்தின்னீரை ஒளுவுக்காகவே கிட்ட அழைத்த ஜலாலுத்தீன்
மணத்தவாசம் புகாரீ ஜஹரானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

தாயின்வயத்தில் லிருந்துவந்து சார்ந்தகள்ளரை வெட்டிடும்
தூயநாகூரொலியின் ஜஹரானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

மக்காப்பள்ளியி லேந்துநேரமும் மிக்கத்தொழுத வொலியுல்லா
தக்கஸதகத்துல்லாவின் ஜஹரானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பெண்ணூரண்டெ யாணுக்கியே புகழ்பெற்றவள்ளல் புகாரியால்
பின்னிடாமல் வபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

மௌத்தின்பின் னெழுப்பியே ஒருவருஷம் ஜீவித்திருந்தமன்
கௌதுல்ஹக்கி புகாரி ஜஹரானல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பறயிடத்தில் சுண்ணும்புவாங்கிப்பின் பேணி வெத்திலே திண்டவர்
நிறைந்த உமறொலி காமில் ஜஹரானல் ஸல்லிமன்ன இலாஹனு(லா)

திருடவந்தவன் கண்ணைப்போக்கிடும் தேர்ந்தமொன்னுமுஹம்மதின்
ஹறமத்தால் அனிர்ரீஹில் லஹமற் ஸல்லிமன்ன இலாஹனு ()

செய்யிதும்மஸ்தான் ஸாஹிபு முஷர்றபா மொலிஹறுமத்தால்
தய்யிபாம் செய்யித் அஹமதாலும் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

குல்லு அன்பியா ஒளலீயா ஸாலிஹீங்கள் துஹாவின் பறக்கத்தால்
தொல்லேசெய்யும் வபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)

நாலுவேதம் வஸஹுபுகளுள்ள நல்லஸெறத்தாலத்தினல்
காலிகே கய்யிதில்வபா வஸல்லிமன்ன இலாஹனு (லா)

மக்கத்தின் வமதீனத்தின் தும்ம மஸ்ஜிதுல் லக்ஸாவதின்
தக்கஷங்கையில் பறக்கத்தைக்கொண்டு ஸல்லிமன்ன இலாஹனு ()

அஞ்சுநேரத்திந் தொழுகையை ஆண்பெண்களு மினிமேவிடும்
பஞ்சுபோல் வபாவை பறக்கவை ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பொய் பெரட்டுகள்வட்டிகோள் புறம்பஸாத்துக ளௌக்கெயும்
கைவிட்டோ மின்தநேரங்காத்தருள் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

இந்தபாவத்தில் மீளவே இனியில்லே எந்த அவானிலும்
சொந்தமாக கிருபை செய்தருள் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

இன்னனு நத்ஹறெக்கனப்கி இந்தநேரம் மினல்வபா
மன்னனே மறலல்வபாமாத்தி ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பஞ்சமும் பலதும்பமும் பறந்தோடச் செய்தருள் பராபரா
கொஞ்சமும் மனக்கலக்கம் வராமல் ஸல்லிமன்ன இலாஹனு (லா)

பாட்டமாய்பலகூட்டமாய்மழைபொழிந்துபெய்யவேபண்ணுவாய்
நாட்டம்போல் வமினல்பலாயா ஸல்லிமன்ன இலாஹனு (லா)

நெருப்புனல்வரு மாபத்தினைத்தையும் நேஷனே அன்பிலாதினல்
திருப்பிவா யுந்திங்களுனையால் தும்ம ஸல்லிமன்ன இலாஹனு (லா)
நம்பினேமுன்னை நம்பினேம் நாங்கள் நல்ஹிமாக்க ஒதுங்கினேம்
தம்பிரானெநீ தயவுசெய்தருள் ஸல்லிமன்ன இலாஹனு (லா)
தஞ்சமெங்களுக் காருமில்லை தன்னையன்றியே தானவா
தன்னடைக்கலமே தகல்னு ஸல்லிமன்ன இலாஹனு (லா)
ரெட்சித்தாண்டரு ளிந்தத்தருணம் ருஹிமேலக்க ஸரணமே
பட்சமாயிரு எங்கள்மீதில் ஸல்லிமன்ன இலாஹனு (லா)
கெஞ்சினேமுனக் கஞ்சினேமெங்கள் கேட்டைநீக்கிய ஹக்கனே
மிஞ்சுமான வபாவைநீக்கி வஸல்லிமன்ன இலாஹனு (லா)
பஞ்சுதிய்யினில் பட்டதுபோலெங்கள் பாவங்கள்தீர்த்துபலனருள்
அஞ்சினேருக் கருள்புரிந்து வஸல்லிமன்ன இலாஹனு (லா)
தூர்கரோ பர்வர்த்திகார் ஸொப்முவீபத்தான் ஒளஹஸரத்தான்
கரபனுமே சுவர்பகாமே ஸல்லிமன்ன இலாஹனு (லா)
ஹம்குநஹ்கார் ஹாவியான் பக்ஷீஷ்கர்தூ ஐஸலாம்
ஹமாரெதில்கூஸாப் பனுதேவ் ஸல்லிமன்ன இலாஹனு (லா)
அப்துகல் லஹ்தாஸமிய்யு பிஅப்துர் றகுமானித்தனீ
அபுவகல் லஹ்லா அனில்ஹூ வஸல்லிமன்ன இலாஹனு (லா)
உத்ஹூனி அஸ்தஜில்லெக்குமென்று உடையவா குல்தவேதத்தில்
நத்ஹூகெஸ்தஜி பித்துஹாஅு வஸல்லிமன்ன இலாஹனு (லா)
இன்னக்குன் மின்பாகிதீ ஷற்தின்னிதா லக்கயாஅல்லா
அந்தஅுஹூ மன்னதானு ஸல்லிமன்ன இலாஹனு (லா)
மன்னுநாதீ ஹீவிவாக்க வலிய்யினு குந்தறப்பனு
குன்லனு வதகப்பல் மின்னு ஸல்லிமன்ன இலாஹனு (லா)
ஸல்லிஸல்லிம் அலன்னபிய்யி வஆலிகி வஸிஹாபிகி
குல்லஹீனின் வத்தாபிஹீன் வஸல்லிமன்ன இலாஹனு (லா)

முற்றிற்று.

## விளம்பரம்.

கோட்டாறு முஹம்மதியா கௌன்ஸில் ஸபையில் ஷை யூர் ஷெய்கு முஹம்மது ஆலிம்சாஹிபு ஷை சபையில் ஒரு நம்பறும், ஸபாநாயகருமாகையால் 1912-வது, வருஷத்தில் பவாகால்ரு தினங்கள். அதிகப்பட்டு அதனுல் ஷை ஸபையோர்கள் ஸபாநாயகரிடத்தில். வபாகால்ரு பலமுஸீபத்துகளுக்கும் ஓதி வருவதற்கு ஒரு முனஜாதுஇயற்றிக்கேட்டுக்கொண்டபடியினுல். இந்த தபவுல் வபா என்னும் கார்மானமுனஜாத்தை இயற்றி அவ்வூரில் ஓதிவந்தார்கள். இதின் பறக்கதால் பலமுஸீபத்துகளும் நீங்கிவிட்டது.

# வீரியவிர்த்தி ஆனந்தலேகியம்.

**தாதுபுஷ்டிக்கு சிறந்த மருந்து.**

**ஆண் தன்மைக்கு இணையற்றது.**



தாங்கள் அடைய வேண்டிய இல்லரசுகத்தை இந்தலேகியத்தால் கட்டாயம் பெருவீர்கள். அநேக மெடல்களும் பரிசுகளும்பெற்ற இந்த லேகியத்தை காலைமாலை இருவேளையும் சாப்பிட்டுவர நெடுநாளாய் இழந்துபோன வீரியவிர்த்தியை உடனேகொடுக்கும். கெட்ட உதிரத்தைபோக்கி நல்ல பரிசுத்தமான உதிரத்தை உண்டாக்கிவிடும் தாதுபுஷ்டியையும் அதிக பலத்தையும் மனசந்தோஷத்தையும் பசிதீபனத்தையும் உண்டாக்கும். சந்தான விர்த்தியைத்தரும் சீதபேதி, உஷ்ணபேதி, இரத்தபேதி இவைகளைநீக்கும். ஆண் தன்மைக்கு ராஜக் கருவிகளான மர்மஸ்தான நரம்புகளுக்கு முறுக்கேற்றமும் எழுச்சியையுந்தரும். இடுப்புநோய், பலயீனம், மேகவெட்டை, மேகச்சூடு, மேககாங்கை, துரிதஸ்கலிதம், நித்திரையில் சொற்பனஸ்கலிதம், மேகவெள்ளை, இரத்தவெள்ளை, நரம்புகளின்சோர்வு இவைகளைநீக்கி இரவில் நல்லநித்திரையைத்தரும் இரகசியகாலத்தில் ஸ்ரீகளோடு அவமானதோர்வை அடைவதைநீக்கி அதிக பலத்தைக் கொடுத்து நெடுநேரம் இன்பத்தை அனுபவிக்க யேதுவுண்டாகும் மூளை விர்த்தியை வுண்டாக்கி நல்ல கியாபகசக்தியையும் ஆனந்தத்தையும் உண்டாக்கும். கொடிய ஸ்திரீகளால் ஏர்ப்பட்ட வியாதிகளை அடியோடு துலைத்துவிடும். வயதுதளர்ந்த கிழவர்களை யௌவன வாலிபர்களாக்கிவிடும். இதன்குணத்தை (Oue Dose) அதாவது ஒரே வேளைமருந்தால் கட்டாயம் அரியலாம். இதன் பெருமையை எழுதுவதானால் இவ்வேடு இடந்தராது அவ்வளவு மேன்மைபெற்றது. அனுபவித்தரியலாம் இதன்குணமரிந்த (சிலோன் வாசிகள் டஜன் கணக்காய் தருவிக்கிறார்கள்) இந்தலேகியத்தை ஒருவேளை சாப்பிட்டவர்கள் தங்களாயிசு உள்ளவரையில் இதை கைவிடமாட்டார்கள் இதுவுண்மை ரொம்பவும் அனுபோகமுடையது. உபயோகவிபரம் மருந்துடன் வரும்.

½-சேர் டப்பி ரூபா 2      1-சேர் டப்பி ரூபா 4

1-டஜனுக்கு 2-டப்பி கமிஷன்

---

**எமது விலாசம்:—ரூயல் அண்டு கம்பெனி,**
சுப்பிரமணிய செட்டி தெருவு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

## மகம்மதிய புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அமீர் அம்ஜாஜங்க் கதை கலிகோ பயிண்டு 1-வது | 2 | 4 | 0 |
| ஷை 2-வது | 2 | 4 | 0 |
| ஷை 3-வது | 2 | 4 | 0 |
| ஷை 4-வது | 2 | 4 | 0 |
| ஷை 5-வது | 2 | 0 | 0 |
| ஷை ஐந்துபாகமும் ஒரேகட்டடம் | 10 | 8 | 0 |
| சீருபுருணம் மூலமும்உரையும் கிளேஸ் கலிகோ 1-வது பாகம் | 4 | 8 | 0 |
| ஷை 2-வதுபாகம் | 4 | 0 | 0 |
| ஜவாயிருல்அதீது | 0 | 12 | 0 |
| குணங்குடி மஸ்தான்சாயபு பாடல் சுத்தப்பதிப்பு படத்துடன் கலிகோ பயி | 1 | 4 | 0 |
| குலிஸ்தான் பூங்காவனம் | 1 | 12 | 0 |
| பெரிய பலபாடத்திரட்டு | 2 | 4 | 0 |
| லிவாவுல் இஸ்லாம் 1-2 வால்யம் | 2 | 4 | 0 |
| முஹம்மதியா மகத்துவம் | 1 | 12 | 0 |
| ஞானமணிமாலை | 0 | 5 | 0 |
| முஹித்தீன்மாலை | 0 | 6 | 0 |
| இராஜமணிமாலை | 1 | 0 | 0 |
| முஹித்தீன் ஆண்டவர் சத்திருசங்காரம் | 0 | 12 | 0 |
| முழுஉலக நியாயாதிபதி | 0 | 10 | 0 |
| தங்கப்பாட்டு மாலையும் ஷிபாமாலையும் | 0 | 5 | 0 |
| கெற்பமாலையும் நஸீஹத்துன்னிஸாவும் | 0 | 5 | 0 |
| ஷை அறபுத்தமிழ் | 0 | 6 | 0 |
| ஜ௳துரிமாலையும் முஸீபத்து விலக்கம் முனாஜாத்தும் | 0 | 5 | 0 |
| மிஃறாஜமாலைவசனம் | 0 | 4 | 0 |
| மான்கதை பாட்டு . | 0 | 4 | 0 |

## தமிழ் கீர்த்தி பெற்றவர்கள் சரித்திரம்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீபாலபக்தவிஜயம் | 0 | 12 | 0 |
| ஸ்ரீமகாபக்தவிஜயம் 6-தாசர்களின் சரித்திரம் படத் | 1 | 8 | 0 |
| ஷை திக்கு | 2 | 8 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 3 | 0 | 0 |
| ஷை 3-வது 4-வது பாகம் | 3 | 8 | 0 |
| பக்தலீலாமிர்தவசனம் 84-பக்தர்கள் சரித்திரம் | 3 | 0 | 0 |
| ஸ்ரீசங்கரவிஜயம் படத்துட | 1 | 0 | 0 |
| விவேகாநந்தவிஜயம் | 1 | 8 | 0 |
| பக்தமாலாவசனம் | 3 | 8 | 0 |
| விநாயகமான்மியம் | 1 | 8 | 0 |
| தாயுமானசுவாமிபாடல் | 1 | 4 | 0 |
| ஷை விருத்தியுரை | 4 | 0 | 0 |
| பட்டணத்தார் பாடல், புலம்பல், பத்திரகிரியார்புலம்பல் மூலமும் உரையும் | 1 | 8 | 0 |
| பதினெண்சித்தர் ஞானக்கோர்வை 2-பாகமும் | 1 | 8 | 0 |
| ஷை 3-பாகம் சேர்ந்தது | 2 | 8 | 0 |
| சத்தியபாஷ அரிச்சந்திர விலாசம் | 2 | 8 | 0 |

## குடும்ப நூல்.

நீங்கள் சுபகாரியங்களுக்கு நாள் பார்க்கவேண்டுமா ?
அப்படியானால் நீங்கள் சோதிடர்களைத் தேடவேண்டாம்

உடனே பழனி ஸ்தலம் பச்சையண சாஸ்திரியாரவர்களால் இயற்றி வெளிவந்திருக்கிற பச்சையபேசகரமென்னும் "சோதிட முகூர்த்த விதானம்" என்னும் நூலுக்கு எழுதுங்கள். சோதிடர்கள், பஞ்சாங்கக்காரர்கள் முதலியவர்களின் உதவியின்றியே அறிந்தோர்முதல் அறியாதவர்கள் வரையில் கண்ணாடிபோல் கண்டறிந்துகொள்ளலாம். இது 242-சாத்திரங்களடங்கியது.

விலை அணா 8.

---

எமது விலாசம்—ரூயல் அண்டு கம்பெனி,

சுப்ரமணியசெட்டி தெருவு, திருவல்லிக்கேணி, மதராஸ்.